பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

5/-
500/-

# உதயன்

விலை ரூபா 6-00

~~ரூ500~~/-

09-09-95

கூட்டு 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி24 சனிக்கிழமை (09-09-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 279

# பொலன்னறுவ எல்லையிலிருந்தும் படையினரின் முகாம்கள் வாபஸ்!

## அதனால் சிங்களவரும் வெளியேற்றம்

கொழும்பு, செப்ரெம்பர் 9

கிழக்கின் பல பகுதிகளில் இருந்து இராணுவ முகாம்கள் வாபஸ் பெறப்படுவது போல—

பொலன்னறுவ மாவட்டத்தின் எல்லைப் புறங்களில் இருந்தும் பல இராணுவ முகாம்களும் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

அதனால் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்று கருதி பொலன்னறுவ மாவட்ட எல்லைக் கிராமங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையான சிங்களக் குடியேற்றவாசிகள் வெளியேறியுள்ளனர்.

இதனால் பொலன்னறுவ மாவட்டத்தில் அகதிகளின் எண்ணிக்கை பெருகி உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கிழக்கு — பொலன்னறுவ எல்லைப்புறத்தில் இருந்த இராணுவ முகாம்கள் மீது கடந்த மாதத்தில் புலிகள் தொடர் தாக்குதல்களை நடத்தினர்.

விடுதலைப் புலிகளின் தாக்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மலையகத்தில் தமிழர் மீது தாக்குதல்

கொழும்பு, செப். 9

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மலையகத்தில் உள்ள தமிழர்களின் ஐந்து கடைகள் அரச சார்பு சிங்களக்காடையர் குழுவினால் தாக்கப்பட்டிருப்பதாக "புலிகளின் குரல்" தெரிவித்தது.

கொழும்பு செல்லும் மலையகத் தமிழர்களும் இம்சைக்கு ஆளாவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

## தமிழருக்கு திடீர் 'கல்தா'!

யாழ்ப்பாணம், செப். 9

திருகோணமலை விமானப் படைத் தளத்தில் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வந்த தமிழ் ஊழியர்களை—எதுவித நிவாரணமோ, நஷ்டஈடோ வழங்காமல்—ஸ்ரீலங்கா அரசு திடீரென பதவியிலிருந்து விலக்கியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகளை மேற்கோள்காட்டி "புலிகளின் குரல்" அறிவித்தது. (உ-4)

## மட்டக்களப்பில் அதிரடிப்படை முகாம்கள்

யாழ்ப்பாணம், செப் 9

மட்டக்களப்பில் இராணுவத்தினர் வெளியேறும் 10 இடங்களில் பொலீஸ் விசேட அதிரடிப் படையினர் தமது பிரதான முகாம்களை அமைக்கவுள்ளதாக தெரியவருகிறது.

கல்லடி, ஊறணி, பிள்ளையாரடி, சத்துருகொண்டான், ஏறாவூர், செங்கலடி, கொம்மாதுறை, வந்தாறுமூலை, சித்தாண்டி, மொறக்கொட்டாஞ்சேனை, ஆகிய இடங்களில் முகாம்கள் அமைக்கப் படவுள்ளதாகவும்—

எதிர்வரும் ஞாயிறு முதல் பொலீஸ் விசேட அதிரடிப் படையினர் இப்பகுதிகளுக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

## படை இருக்கும் நிலைகளை அறியும் உபகரணங்கள் பெற புலிகள் முயற்சி

கொழும்பு, செப். 9

பாதுகாப்புப் படைகளுக்கு எதிரான தாக்குதல்களுக்கு வசதியாக வளைகுடாப் போரின்போது அமெரிக்க, பிரித்தானிய படைகள் பயன்படுத்திய அதி உயர் தொழில்நுட்பம் கொண்ட உபகரணங்களைப் பெறும் முயற்சியில் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என பாதுகாப்புப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக "திவயின" பத்திரிகை தெரிவிக்கிறது.

கடந்த வாரம் ஈரப்பெரியகுளத்தில் இராணுவத்தின் சோதனையின் போது ஒரு லொறியில் கொண்டுவரப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களை இராணுவப்பகுப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஈழத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து தமிழகத்தில் தடையை மீறி ஊர்வலம்

### திராவிடர் கழகத்தலைவர் வீரமணி கைது

சென்னை, செப். 9

ஸ்ரீலங்கா அரசு தமிழர்கள் மீது மேற்கொண்டுள்ள இன அழிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்து தமிழ் நாட்டில் பொலீஸாரின் கடும் எதிர்ப்பிற்கும் மத்தியில் திராவிடர் கழகம் ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளது.

ஊர்வலத்தை தடுத்து நிறுத்த தமிழக பொலீஸார் பெரும் பிரயத்தனம் மேற்கொண்டபோதும் அதனைத் தடுக்க முடியவில்லை என

[5 ஆம் பக்கம் பார்க்க]

## தீர்வுத் திட்டத்தின் நோக்கங்கள் சிலருக்கு சரிவரப் புரியவில்லை!

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு செப். 9

சில அரசியல் தலைவர்களும், பௌத்த பிக்குகளும், பொது மக்களில் ஒருபகுதியினரும் தீர்வுத் திட்டத்தின் நோக்கங்களைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. இதுவே இத்தீர்வுத் திட்டத்தில் உள்ள ஒரேயொரு பிரச்சினையாகும்.

— இவ்வாறு கூறினார் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்.

வெரித்தாஸ் வானொலி இத்தகவலை வெளியிட்டது.

தற்போது அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனைகளை மாற்றியமைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை.

அதிகாரப் பகிர்வு பற்றிய இத்தீர்வு யோசனைகள் அனைத்துக் கட்சிப் பிரமுகர்களிடமும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே நாடாளுமன்றில் வாக்கெடுப்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ஷெல் தாக்குதல்

அளவெட்டி, செப். 9

நேற்றுக் காலை 6-30 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து வலிவடக்குப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான், ஏழாலை, அளவெட்டிப்பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. இப்பகுதிகளில் இருந்து மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து இருந்ததால் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. [உ-13]

## ஏறாவூரில் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பகுதியில் பொலீஸ் காவலரண் ஒன்றின் மீது நேற்றுக் காலையில் விடுதலைப் புலிகள் றொக்கட் தாக்குதல் நடத்தியதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன. (உ-4)

## சமாதானம் வேண்டிப் பேரணி

நாட்டில் அமைதி, சமாதானம் நிலவவேண்டி கந்தானை புனித செபஸ்தியார் ஆலயத்திலிருந்து கபிகொட தேவாலயத்துக்கு நேற்று சமாதானப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. இந்தப் பேரணியில் பெரும் எண்ணிக்கையானோர் பங்குபற்றியதாக அறிவிக்கப்பட்டது. [உ-4]

## மிதிவெடியில் கைவிரல்களை இழந்த இளைஞர்

வட்டுக்கோட்டை, செப். 9

வட்டுக்கோட்டைப் பகுதியில் மிதிவெடி போன்ற ஒரு பொருளை பரீட்சித்துப் பார்த்த இளைஞர் ஒருவர் அது வெடித்ததில் ஒரு கையில் ஐந்து விரல்களையும் இழந்தார்.

நேற்று முன்தினம் காலையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியடி ஒழுங்கையில் இச்சம்பவம் இடம்பெற்றது. (உ-161)

## 'த ஐலண்ட்' அலுவலகத்தில் பொலீஸார் விசாரணை!

கொழும்பு, செப். 9

தென்னிலங்கையின் பிரபல நாளிதழ்களான 'த ஐலண்ட்' மற்றும் 'திவயின' பத்திரிகைகளின் பணிமனைக்குள் மேற்று முன்தினம் இரவு புகுந்த பொலீஸார், அதற்கு முந்திய நாள் பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி குறித்து ஆசிரிய பீட உறுப்பினர்களிடம் விசாரணை நடத்தி அவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தனர்.

அரச நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில், அமைச்சரவையை இராஜினாமாச் செய்யும்படி பின்வரிசை உறுப்பினர்கள் கோரினர் என்று வெளியான செய்தி குறித்தே பொலீஸார் விசாரணை நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மாலுமிகளை விடுவிக்க பேச்சு தொடர்கின்றது

கொழும்பு, செப். 9

"ஐரிஷ் மோனா" கப்பலின் மாலுமிகளை விடுவிப்பது குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேசி வருவதாக ஸ்ரீலங்கா அரசுத் துறை வட்டாரங்கள் கொழும்பில் தகவல் வெளியிட்டன.

ஏதோ ஒருவகையில் பேச்சுகள் இடம்பெற்று வருவதாக ஏ. எவ். பி. செய்தி நிறுவனமும் தெரிவித்தது.

மாலுமிகளை விடுவிப்பதற்கு புலிகள் விதித்துள்ள நிபந்தனை குறித்து இதுவரை எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை என்று

[5 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர்களுக்கு முன்மாதிரியாகத் திகழும் கண் சத்திரசிகிச்சை நிபுணர் குகதாசன்

சர்வதேச ரீதியாக மக்கள் தொண்டாற்றிவரும் நிறுவனங்களில் றோட்டறி இன்ரர்நாஷனல் மிகப் பரந்த, பெரிய இயக்கமாகும்.

சமூகத்துக்கு அதி உயர் சேவைகளை வழங்கும் தனிப்பட்டவர்களுக்கு "போல் ஹரிஸ் விருது" என்ற மதிப்பும், பெருமதியும் மிக்க விருதை சர்வதேச றோட்டறி இன்ரர்நாஷனல் வழங்கி வருகிறது.

1994 - 1995 ஆம் றோட்டறி ஆண்டில் இத்தகைய ஒரு சிறப்புடை விருதைப் பெறுவதற்கு யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் தகுதியானதாகத் தெரிவுசெய்யப்பட்டமை பேரதிர்ஷ்டமாகக் கருதப்படவேண்டியதாகும்.

இந்த அதி உயர் விருது யாழ். றோட்டறிக்குக் கிடைத்த சில நாட்களில், கடந்த வருடத் தலைவர் PHF சரவணபவன் அவர்கள், சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் றோட்டறியின் கண் சிகிச்சை முகாம் நடைபெற்ற வேளை, போல் ஹரிஸ் விருது பெறுவதற்கான தகுதியான ஒருவரைச் சிபாரிசு செய்வது குறித்து என்னுடன் கலந்தாலோசித்தார்.

அப்போது நான் மிகவும் அமைதியான, பகட்டற்ற, தனித்துவம் வாய்ந்த, பிரசாரமும் புகழும் விரும்பாத, தனது வேலையில் அதிகம் கவனம் செலுத்தி வரும், ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டேன்.

அந்த அன்பர் றோட்டறிக் கழக உறுப்பினர் அல்லர். எனினும் அவரின் சேவையை எடை போட்டபோது தவிர்க்க முடியாத ஒரு தெரிவாக அது இருந்தது.

நாங்கள் அவரைச் சந்தித்து, இந்த விருதுக்கு அவரைச் சிபாரிசு செய்வது குறித்து அவரிடம் தெரிவித்தோம். இதனைத் தெரிவித்த போது, அமைதியாகத் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு, அந்த விருதுக்குத் தெரிவாகுவதை ஏற்றுக் கொள்ள மிக அடக்கத்துடன் அவர் மறுத்து விட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை நிபுணரான டாக்டர். குகதாசன் அவர்களே மதிப்பு வாய்ந்த ஹரிஸ் போல் விருதைப் பெற மறுத்த பெரு மனிதராவார்.

இந்தப் பெரிய மனிதர், தன்னைத் தாழ்த்திக் கொண்டதோடு, பல் வகைகளாலும் முற்றுகையிடப்பட்டுள்ள எமது மக்களுக்கு தாம் ஆற்றும் சேவையையும் பெரிதுபடுத்திக் கொள்ளாமல் இந்த விருதை ஏற்க மறுத்து விட்டார்.

எனினும் இந்த விருதை வழங்குவதால் எங்கள் பாராட்டையும் நன்றியையும் நாம் வழங்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது என்று பலவாறாக எடுத்துரைத்ததின் பேரில், மிகுந்த தயக்கத்துடன், இறுதியில் அதனை ஏற்க அவர் இணங்கினார்.

எமது 54 ஆவது வருடாந்த விழாவில் வைத்து அந்த விருது அவருக்கு வழங்கப்பட்டபோது முழு மனதுடன் அதனைப் பெற்றுக்கொண்டார்.

எனினும் அதற்குரிய பாராட்டு வைபவம் ஒன்றை அன்றே நடத்துவதற்கு தமக்கே உரிய அடக்கத்துடன் அவர் மறுத்து விட்டார். இன்று அவருக்கு பாராட்டு விழா நடப்பதையிட்டு நாம் மிகவும் அகமகிழ்ந்து இறும்பூதெய்துகிறோம்.

எனது அரை நூற்றாண்டு கால மருத்துவத்துறை சேவைக் காலத்தில், கொடை வள்ளல்களையும், வைத்திய கலாநிதிகளையும், திறன்மிகு ஆசிரியர்களையும் சந்தித்துள்ளேன். அவர்களின் நினைவழியாச் சேவைகளை, குணநலன்களை, மனப் பதிவுகளை நான் இன்றும் மீட்டு நெஞ்சம் நிறைவடைவது உண்டு. எனினும் டாக்டர் குகதாசன் என்னைக் கவர்ந்தது போன்று, அவர்களில் எவரும் என்னைக் கவர்ந்ததில்லை எனலாம். நோயாளர் சேவையில் டாக்டர்களுக்கு அவர் முன்னுதாரணமாக விளங்குகிறார் என்றால் மிகையாகாது.

நான் மருத்துவத் துறையில் நீண்ட காலம் பணியாற்றியவன், றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் என்ற வகையில், டாக்டர் குகதாசனின் சேவைகளை நன்றி உணர்வுடன் பாராட்டுவது எமது கடமை என்று கருதுகிறேன்.

இறுதியாக எனது தனிப்பட்ட நன்றியையும் டாக்டர் குகதாசன் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சமுதாயத்தில் நான் தொடர்ந்து சேவை ஆற்றுவதற்காக டாக்டர் குகதாசன் அவர்கள் எனக்கு பார்வையையும் அளித்தார் என்பதனை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இறுதியாக டாக்டர். சோமசுந்தரராஜாவுக்கும் ஹான்ஸ் வேர்த் றோட்டறிக் கழகத்துக்கும் எமது நன்றிகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது உதவியின்றி இச் சிறப்புக்கள் எம்மை அணி செய்திருக்க முடியாது.

**டாக்டர். எஸ். ராஜசூரியர்**
250, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[சு/2037]

## ஆலயங்களில்

மீசாலை இராமாவில் கந்தசாமி கோயில் தேர்த்திருவிழா நாளை ஞாயிறு காலை 8 மணிக்கு நடைபெறும் மறுநாள் திங்கள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (ஓ)

★ ★ ★

கோண்டாவில் கிரேசனடி செம்மா தோட்ட ஞானவைரவ சுவாமி கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் நடைபெறும். இன்று சனிக்கிழமை பத்தர்கள் எண்ணெய் சாத்துதல் இடம் பெறும். [ஓ]

## புலிகளின் குரல் வானொலியில்

**09 - 09 - 1995**
**சனி இரவு**

- ★ 8-02 — புரட்சிக்குரல்
- ★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-20 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கவியரங்கம் — "சூறைக் காற்றிடையும் எம் சுதந்திர தீபம் சுடரும்"

**10 - 09 - 1995**
**ஞாயிறு காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**சனி மாலை**

- ★ 5-01 — சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
- ★ 5-30 — அறிவியல் வினாடி வினா
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — என் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — பாமாலை


## மனையியல் வகுப்புக்கள்

★ தையல் ★ கேக் ஐசிங் ★ சமையற்கலை
★ கைப்பணி, ★ கூந்தல் அலங்காரம்
★ பூவேலை, ★ கோலம்

**புதிய பிரிவு**
**ஆரம்பம் 16 - 09 - 1995**
சனி காலை 9 மணி
பதிவு செய்து கொள்ளுங்கள்

**மனையியற் கல்வியகம்**
370, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

[38447]

## பயிலுநர்கள் தேவை

பிரபல கணக்காய்வு நிறுவனம் ஒன்றிற்கு பயிலுநர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்கள் க. பொ. த. உயர்தர வர்த்தகப்பிரிவில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் கணக்கியல் உட்பட 03 பாடங்களிலாவது சித்தி பெற்றிருத்தல் வேண்டும். தகுதியானவர்கள் 15 - 09 - 95 ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர எண்: 842,
உதயன்,
யாழ்ப்பாணம்.

(சி-2193)

## 60-ம் நாள் நினைவஞ்சலி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி
செல்வி. பா. ஸ்ரீ பாமினி

அவர்களின் பெற்றோரான அமரர்கள்
திரு. திருமதி பாலகிருஷ்ணன்

ஆகியோரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— 96 கலைப்பிரிவு.

மகாஜனக் கல்லூரி,
மருதனார்மடம்.

[38460]

## ஓராண்டு நினைவலைகள்



**அமரர் இராசு சிவசுந்தரம்**

அன்னை மடியில்: 24 - 11 - 1949
ஆண்டவன் அடியில்: 22 - 08 - 1994

**திதி: 09 - 09 - 1995**

அன்பால் வென்றஎம் அரும் துணைவரே!
ஆற்றிடாச் செய்தி ஒன்றை எமக்களித்துச் சென்றீரே
சிரிக்க வைத்தாய் சிந்திக்க வாழவைத்தாய்
சிறப்பாக வாழ்ந்தது போதுமென்று இறைவன்
உம்மை அழைத்தானோ
எம்மை எந்நாளும் அழவைத்தானோ
எம் இதயக் கோயிலிலே எங்கள் அப்பாவிற்காய்
உதயமாய் ஓர் ஆலயம் அமைத்திடுவோம்.

உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, பிள்ளைகள், தாய், தந்தை,
உற்றார், உறவினர்கள்.

506/01, கே. கே. எஸ். றோட்,
[மனோகரா தியேட்டர் முன்பாக]

[38462]

## P' நியு சயன்ஸ் சென்ரர்

எழில்கம்முன்
யாழ்ப்பாணம்!

**மீட்டல் வகுப்பு**
**ஆரம்பம்:**
**09-09-95**
8 a. m.

**PURE-APP.**
திரு. குணசிங்கம்
B. Sc. (Hons)
4 p.m. 6 p m.

**CHEMISTRY**
திரு. சிவசோதி
B. Sc. [Cey.]
10 a. m.

**PHYSICS**
திரு. ஜெயசீலன்
B. Sc. (Hons) Dip in. Ed
9a. m.

**ZOOLOGY**
திரு. ஈஸ்வரதாசன்
B. Sc. Cey. Dip. In. Ed.
8 a. m.

**BOTANY**
திரு. பாலா
11 a. m.

(சி/2213)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.



# அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் வாழும் தீவக மக்கள்

யாழ்ப்பாணம், செப். 9

தீவுப்பகுதி ஆஸ்பத்திரிகளின் பொதுவாகப் பனடோல் தவிர வேறு மருந்து கிடையாது. கப்பல் வந்தால் தவிர மரக்கறி இல்லை, வெற்றிலை இல்லை: குத்தரிசியைக் கண்ணாலும் காணமுடியாது. எல்லாம் அம்மாப்பச்சையரிசிதான்.

''ஐரிஷ் மோனா'' கப்பலில் பயணம் செய்து தற்பொழுது புனித ஜோன் பொஸ்கோ சாலைகள் நடைபெறுகின்றன. ஆனால் தொண்டர் ஆசிரியர்களே அங்கு கற்பிக்கின்றார்கள் என்றும் அவர் கூறினார்.

ஆஸ்பத்திரியில் ஓய்வு பெற்ற 65 வயதுக்கு மேற்பட்ட அப்போதிக்கரி ஒருவர் பணி புரிகின்றார்; அங்கே பனடோலைத் தவிர வேறு மருந்து எதுவும் கிடையாது என்றும் அவர் சொன்னார்.

உதிரிப்பாகங்களைக் கொண்டு வர அனுமதி கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

அனலைதீவைச் சேர்ந்த திருமதி கமலம் தெரிவிக்கையில் மரக்கறியை அதிகாலையிலேயே போட்டி போட்டு வாங்கவேண்டி இருக்கிறது. பிந்தியவர்களுக்கு அன்று மரக்கறி கிடையாது. மீனைக் கனவாகப் பிடிக்க வேண்டிய நிலையில் அனலைதீவு மீனவர்கள் இருக்கின்றார்கள் என்றார்.

மதி ஆ. சிவஞானம் தெரிவிக்கையில் கப்பல் ஓடாவிட்டால் தங்களுக்குப் பொருட்கள் கிடையாது என்றார்.

'ஐரிஷ் மோனா' பயணிகளில் அநேகமானோர் மருத்துவ சிகிச்சைக்காக திருகோணமலைக்கும் கொழும்புக்கும் சென்றவர்கள் என இப்பேட்டிகளின் போது அறிய முடிந்தது.

மக்கள் மருத்துவ சிகிச்சைக்கு திருகோணமலைக்குச்

## குத்தரிசியை கண்ணாலும் காணவே முடியாது; பனடோலை தவிர வேறுஎந்த மருந்தும் இல்லை

பாடசாலையில் தரித்து நிற்கும் தீவக மக்கள் பலரும் இவ்வாறு கூறினார்கள்.

நயினாதீவு. அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, காரைநகர் ஆகியவற்றைச் சேர்ந்த இந்தப் பயணிகள் தத்தமது தீவுகளின் நிலைமை குறித்து உதயனுக்குப் பேட்டி அளித்தனர்.

பொருளாதார ரீதியில் மிகவும் கஷ்டமான நிலையில் தாம் வாழ்வதாகப் பலரும் தெரிவித்தனர்.

### நயினாதீவு

நயினாதீவு நிலைமை குறித்து திரு. நாகலிங்கம் சிவராசா (வயது 46) என்பவர் தெரிவிக்கையில் கடற்படையின் கட்டுப்பாட்டில் நயினாதீவு இருக்கிறது. அரச அதிபர் ஊடாக அனுமதி பெற்றே அங்கிருந்து பயணம் செய்ய முடியும். ஊர்காவற்றுறையில் இருந்து வெளியேற ஈ.பி.டி.பியின் அனுமதி பெற வேண்டும் என்றார்.

நயினாதீவில் சில பாடசாலைகள்

### அனலைதீவு

அனலைதீவைச் சேர்ந்த 84 வயதான முதியவர் திரு. சி. வேலுப்பிள்ளை தெரிவிக்கையில் இரண்டாயிரத்துக்குக் குறைவான மக்கள் அனலைதீவில் வாழ்வதாகவும் தொழில் வாய்ப்புகள் மிகவும் அருகிய நிலையில் கஷ்டமான சீவியம் நடத்துவதாகவும் கூறினார்.

அனலைதீவில் கடலில் சென்று மீன்பிடிக்க படையினரிடம் அனுமதி பெற வேண்டும். அதுவும்இடுப்பளவு தண்ணீரில் பகலில் தான் பிடிக்க முடியும். பிடித்த மீனை கடற்படைக்குக் காட்டி விட்டுத்தான் கொண்டுவர முடியும் என்றும் அவர் கூறினார்.

வாழை, புகையிலை, மிளகாய் முதலிய பயிர்ச் செய்கை சாகுபடியை இப்பொழுது செய்ய முடியாமல் இருக்கிறது. உரம் இன்மை இதற்குஒருகாரணம். ஆயிரக்கணக்கான வாட்டர் பம்புகள் திருத்தப்படாமல் இருக்கின்றன. இவற்றுக்கான உதிரிப்பாகங்களைக் கொண்டு வர அனுமதி கிடையாது என்றார்.

### எழுவைதீவு

எழுவைதீவைச் சேர்ந்த திருமதி சதாசிவம் மனோன்மணி, தெரிவிக்கையில் தங்கள் தீவில் மருந்துத் தட்டுப்பாடு கடுமையாக உள்ளது என்றார்.

நோயாளிகள் காரைநகருக்குச் சென்றே சில மருந்துகளைப் பெறமுடியும் என்றும் அவர் கூறினார்.

### நெடுந்தீவு

நெடுந்தீவைச் சேர்ந்த திருமதி சின்னம்மா தெரிவிக்கையில் தாங்கள் இரவில் 6 மணி முதல் காலை 6 மணி வரை வீட்டுக்கு வெளியே போக முடியாது. அவசரமாகப் போக நேரிட்டால் லாம்புடன் செல்ல வேண்டும் என்று கூறினார்.

நெடுந்தீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. வ. ஐ. நல்லதம்பி (வயது 67. தெரிவிக்கையில் நெடுந்தீவில் தற்போது சுமார் 7 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள். சாப்பாட்டுக் கஷ்டம், போக்குவரத்துக் கஷ்டம், மருந்துக் கஷ்டம் முதலிய எல்லாக் கஷ்டங்களையும் நாங்கள் அனுபவிக்கின்றோம் என்றார்.

எங்கள் மக்கள் மாலை 6 மணிக்குப் பின் வெளியே செல்ல முடியாது. எங்களுக்கு மண்எண்ணெய் கிடைப்பது குறைவு. மீன்பிடித் தொழிலுக்கு பெருங்கடலுக்குப் போக முடியாது என்றும் அவர் சொன்னார்.

### காரைநகர்

காரைநகரைச் சேர்ந்த திரு

செல்லும் நிலையிலேயே தீவக மருத்துவ சேவை நடைபெறுகிறது.

தீவகத்தில் அரசாங்கத்தின் சிவில் நிர்வாகம் என்ன செய்கிறது?

அம்மாப் பச்சையரிசி கொடுப்பது தான் சிவில் நிர்வாகமா?

மக்களின் அத்தியாவசிய தேவைகளைக் கவனிக்காத நிலைமையை சிவில் நிர்வாகம் என்று அழைக்க முடியுமா? இப்படி இப் பயணிகளில் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

(இ-க-எ)

பயிற்சி
வினாத்தாள்கள்
(விடைகளுடன்)
ஆண்டு 3, 4, 5
எல்லாப்
பாடங்களுக்கும்
09-09-95
செப்ரெம்பர் மாத
வெளியீடு வெளிவரும்
BOND
யாழ்ப்பாணம்.
(8728)

SPOKEN ENGLISH
BY
MR. BRITTO
புதிய பிரிவு
ஆரம்பம்
10 - 09 - 95
1 p.m
நேர அட்டவணை
SAT—SUN 1 P. m
P' NEW SCIENCE CENTRE
எழிலகம் முன்,
யாழ்ப்பாணம்.
(இ-2212)

A\L ECONOMICS
திரு V. R. ராகவன் B. A. (Hons)
விரிவுரையாளர்
சனி
ஞாயிறு ) 1-00
ஆரம்பம்: 9 - 9 - 1995
BOND கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்
(8730)

A\L CHEMISTRY
திரு. சிவசோதி B. Sc.
சனி, ஞாயிறு
9-00 — பிரிவு I
12-00 — பிரிவு II
1-00 — பிரிவு III
ஆரம்பம்: 09 — 09 — 1995
BOND கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்.
(8732)

பூப்பு மஞ்சன நீராட்டு விழா அழைப்பு



அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான யுவ ஞூ ஆவணித் திங்கள் 25 ஆம் நாள் (10 - 09 - 1995) ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிமுதல் 11-00 மணிவரை வரும் துலாலக்கின சுபவேளையில்,

எமது ஏக புத்திரி, திருநிறை செல்வி
★ ஸ்ரீபிரியா ★
அவர்களுக்கு

பூப்புமங்கள மஞ்சள் நீராட்டி ருதுசாந்தி செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்;
தங்கள் நல்வரவை விரும்பும்
திரு. திருமதி கோபாலகிருஷ்ணன்
(ஸ்ரீ மீனாட்சி அச்சகம் - நல்லூர்)

4, மூத்தவிநாயகர் வீதி,
கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.

அவ்வண்ணமே விரும்பும், செ. மெற்றாஸ்மயில் (மாமன்)
(38436)

உ
நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய
பரிபாலனசபை
முக்கிய அறிவித்தல்

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் (நல்லைநாதசுவாமி) ஆலயத்திற்கு உரிய காணிகளை குத்தகையாகப்பெற்று குடியிருப்போரிடமும், வியாபார நோக்கத்திற்காக உபயோகிக்கப்பட்டுவரும் காணிகளுக்கான குத்தகைப் பணத்தினை ஆலயத்தில் செலுத்தும்படி கடந்த வருடங்களில் பத்திரிகை மூலமும், அச்சிட்ட கடிதங்கள் மூலமாகவும் பல தடவை மேற்படி சபையால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் இன்றுவரை நிலுவையுடன் மேற்படி காணிகளுக்கான குத்தகைப் பணத்தினை செலுத்தாமல் இருந்து வருவது வருந்தத்தக்கது.

நாட்டின் இன்றைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இவ் ஆலயத்தை பரிபாலித்து வரும் பரிபாலன சபையினர் மேற்படி ஆலயத்துக்கு உரிய காணிகளுக்கான குத்தகைப்பணத்தை நிலுவையுடன் அறவிட தீர்மானிக்கப்பட்டது தவிர்க்க முடியாததாகும்.

எனவே மேற்படி காணிகளில் குடியிருப்போரும், வியாபார நோக்கத்திற்கு காணிகளை உபயோகிப்போரும் தயவு செய்து நிலுவையுடன் குத்தகைப் பணத்தினை 15 - 09 - 1995ஆம் திகதிக்கு முன் பொருளாளர்/ காசாளர் உடன் தொடர்பு கொண்டு பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி;

ஆலய சேவையில்,
செயலாளர்,
சட்டநாதர் ஆலய பரிபாலனசபை.
(38423)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தரமான வயலின் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. கோ. விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (38437)

ஆண்களுக்குரிய புதிய நிலையிலுள்ள லுமாலா சைக்கிள் கியர் உடன் விற்பனைக்குண்டு. மாலை நேரங்களில் பார்வையிடலாம். தொடர்பு: 101, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [38426]

அல்சேஷன் ஆண் நாய்க்குட்டி [Wormed and Weaned] விற்பனைக்குண்டு. காலை 9-00 மணி பிற்பகல் 2-30 — 5-00 மணிக்குச் சந்திக்கலாம். I. K. நடேசன், "நந்தினி நந்தவனம்" 15, மலர்மகள் வீதி, அரியாலை. (38434)

தூய சடைச் சணன் (puree Breed Sanaan) சினை ஆடும், 7 மாத வயதுடைய சடைச் சணன் கடா ஆடும் விற்பனைக்கு உண்டு. தி. வரதராஜன், இலுப்பையடி பிள்ளையார் ஒழுங்கை, பூதர் மடத்தடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். (8725)

### ஜெனரேற்றர் விற்பனை

Shiriram Honda 1200 Watts புத்தம் புதிய ஜெனரேற்றர் உடன் விற்பனைக்கு உண்டு. எக்ஸ்பிறஸ் கல்வி நிலையம், இருபாலைச் சந்தி, கோப்பாய். (38424)

### ஆடு விற்பனைக்கு

5 மாதம் நிரம்பிய "ஜமுனா பாரி" ஆட்டுக்குட்டிகள், 4 போத்தல் பால் எடுக்கக் கூடிய 'சணன்' ஆடும் விற்பனைக்கு: 105, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். (வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில்) [38451]

### காணி விற்பனைக்கு

இந்து மகளிர் ஆரம்ப பாடசாலைக்கு அருகில் 1¼ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய இடம்: குறிஞ்சி மெடிக்கல்ஸ், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (38457)

### மணமகன் தேவை

யாழ். இந்து, 27 வயது, கார்த்திகை நட்சத்திரம், Canadaவில் Computer System Analyst ஆக வேலை பார்க்கும் பெண்ணுக்கு, படித்த மணமகன் தேவை. கனடாவில் உள்ளவர் விரும்பத்தக்கது. இங்குள்ளவராயின் Sponsore பண்ணலாம். சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்: வி. இல. 844, மே/பா. உதயன். (38438)

### மணமகள் தேவை

இரகபாவம் குறைந்த செவ்வாய் குற்றமற்ற மகநட்சத்திரம், 31 வயது, பட்டதாரி ஆசிரியைக்கு தகுதியான உள்நாட்டு மணமகனும், 7இல் செவ்வாய், பாவம்குறைந்த, 30 வயது, பட்டப்படிப்புடன் சொந்த வர்த்தக நிலையமுடைய மணமகனுக்கு மணமகளும் தேவை. தனியாகவோ அல்லது மாற்றாகவோ விரும்பத்தக்கது. கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும். வி. இல. 841, உதயன், யாழ்ப்பாணம். (38406)

### தேவை

நன்கு முற்றிப்பழுத்த விளாம்பழமும், ஜமுநாறம் தோடம்பழமும் கொள்வனவு செய்யப்படும். ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-2192)

### பசு விற்பனைக்கு

கன்றுடன் கூடிய ஊர் வெள்ளைநிறப் பசு விற்பனைக்கு உண்டு. 212/2, கோயில் வீதி, நல்லூரில் (கைலாச பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக) நேரில் பார்வையிடலாம். (சி-2212)

### சீயாக்காய்ப் பவுடர்

எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்ற நிலையை உணர்ந்து அதனைப் பேணிக் காக்கும் முகமாக சித்த மருத்துவ நிபுணர்கள் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்டது ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர். சீயாக்காயுடன் மூலிகைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்ட பவுடரை வாங்கி பாவித்து பலனைப் பெறுவீர்களாக. (சி-1727)

### O/L 95 பரீட்சைக்காக

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம், வர்த்தகம், விவசாயம், மனையியல், சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8721)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு -5 மாதிரி புலமைப் பரிசில் 13வது பரீட்சை நாளை காலை 7-30க்கு நடைபெறும். மாணவர்கள் 7-15க்கு சமுகம் கொடுப்பது நன்று. உடன் திருத்தியும் கொடுக்கப்படும். ஸ்ரார். சயன்ஸ் சென்ரர், அரியாலை [38458]

## சிவானந்தர் ஜயந்தி விழா

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கம் எதிர்வரும் 17 ம் திகதி சுவாமி சிவானந்தரின் ஜயந்தி விழாவை வெகு விமரிசையாக கொண்டாடவுள்ளது. (ஓ)

## ஆண்டு -5
புலமைப் பரிசில்

பாடசாலை அனுமதி

பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன்

ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும்.

அடுத்த வெளியீடு!

**10-09-95**
ஞாயிறு

**BOND**
யாழ்ப்பாணம்.
(8727)

## O\L - 95 MATHS

திரு. V. N. பத்மநாதன்

மீட்டல் வகுப்பு

சனி, ஞாயிறு, திங்கள், வெள்ளி
பி. ப. 4-00 – 6-00

ஆரம்பம்: 09 – 09 – 1995

**BOND** கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்.
(8731)

உ

மாலைசந்தை, வல்லபாதேவி சமேத
## வரதராஜா விநாயகர் ஆலயம்
அல்வாய்.

குப்பாபிஷேக மண்டலாபிஷேக தினங்களில் 45 நாள்களும்

**மகாபாரதம்**
(தெய்வீக தொடர் சொற்பொழிவு)

நேரம்: மாலை 6.30 — 7-30 மணி

ஆசி உரை: கிரியாகலாப முக்தாமணி
பிரம்மஸ்ரீ சபா. தேவராசாக் குருக்கள்
(ஆலய பிரதமகுரு)

அகில இலங்கைச் சைவக்குருமார், அர்ச்சகர் சபையின் வித்தியாவிருத்திக்குழு சார்பில் சொற்பொழிவை நிகழ்த்துபவர்;


சித்தாந்த சாகரம் சிவத்திரு
கே. எஸ். எ. ஜெயவரன்
ஜெகதீஷ் ஐயர் B. B. A.
(ஆசிரியர் யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி)

தகவல்:
அகில இலங்கை சைவக்குருமார்
அர்ச்சகர் சங்கம்.
(சி-2206)

நெஞ்சை விட்டகலாத நினைவுடன்
இன்றும் .. இனியும்... என்றும்

கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களின்

## ஓராண்டு நினைவில்
நனைகின்றோம்



**கலாகேசரி ஆ. தம்பித்துரை**
(முன்னைநாள் சித்திர வித்தியாதரிசி)

நீ சிரித்தசிரிப்பெங்கே? அரங்கமெங்கும்
நீ நிமிர்ந்த அழகெங்கே? அன்பிலூறி
வாயுதிரும் மொழியெங்கே? எல்லாம் சென்று
வருடமொன்று ஆனதுவா?

எங்கள் உயிருள்ளவரை உங்கள் நினைவிருக்கும்

அன்புடன் தங்கள் நினைவுடன்
திருமதி சி. பாக்கியம் (சகோதரி)
திருமதி வசந்தி-ரகுராம் (மருமகள்)
மற்றும் உறவினர், நண்பர்கள்.


சுன்னாகம்,
யாழ்ப்பாணம். (சி/2205)

கலாகேசரி

## திரு. ஆறுமுகம் தம்பித்துரை
(முன்னாள் வடமாநில சித்திரக் கல்விப் பணிப்பாளர், சித்திர வித்தியாதரிசி, SLEAS)
அவர்களின்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05 – 05 – 1932



மறைவு: 09 – 09 – 1994

'கவின்கலைக்கோர் கலாகேசரி' என விளங்கி, சிற்ப, சித்திரக் கலைஞனாகவும், அறிஞனாகவும் திகழ்ந்து, தனது கைவினைத் திறனைக் கலைவடிவங்களாகப் படைத்தது மட்டுமன்றி இலக்கியமாகத் தந்திட்டவரும்,

சித்திர வித்தியா தரிசியாகக் கடமையாற்றிய காலையும் ஓய்வு பெற்ற பின்னரும், சிறுவர் சித்திர வளர்ச்சிக்குப் புத்தூக்கம் அளித்து முனைப்புடன் செயற்பட்டவரும்,

எமது சபையின் நீண்டகால உறுப்பினராகவும், தலைவராகவும், மணிவிழாச்சபைத் தலைவராகவும், நுண்கலை மன்ற இயக்குநராகவுமிருந்து அருஞ்சேவை ஆற்றியும்,

எமதூரின் கலை சமயம் மற்றும் பொதுப்பணிகளில் எல்லாம் இதயபூர்வமாக ஈடுபட்டுத் தமது பங்களிப்பை நல்கியும்,

எமது சபைக்கும், குரும்பசிட்டிக் கிராமத்திற்கும் பெருமை சேர்த்தவருமாகிய, இராஜஸ்தபதி, சிற்பகலாதிலகம், இரதச் சக்கரவர்த்தி, கலாபூஷணம் எனப் பலவாறு போற்றப்பட்ட நீங்காச் சிறப்பைப் பெற்ற கலாகேசரி அவர்களை, அன்னார் அமரத்துவமடைந்து ஓராண்டு முடிவுற்ற நாளாகிய இன்று எமது சபையினர் நன்றியுடன் நினைவு கூருகின்றனர்.

எமது சபையின் மூலம் அவர் ஆற்றிய கலைப் பணிகளைத் தொடர்ந்து சிறப்புற ஆற்றுவதற்கு அவரின் நினைவுகள் எம்மை ஊக்குவிக்குமாக.

அன்னாரின் அழியாப் புகழ் கலையுலகில் என்றும் நின்று நிலவுவதாக.

— சன்மார்க்க சபையினர்.

குரும்பசிட்டி, தெல்லிப்பழை. [38425]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தர்மம் தலைசாயாது

தென்னிந்திய திருச்சபையையும், அதன் யாழ். ஆதீனப் பேராயர் அதி. வணக்கத்துக்குரிய எஸ். ஜெபநேசன் அவர்களையும் அவமதிக்கும் வகையிலும், அவதூறு செய்யும் வகையிலும் தெற்கில் விஷமப் பிரசாரம் ஒன்று அண்மையில் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது.

அந்தப் பொய்மையைக் கிழித்தெறியும் வகையில் உண்மைகளை எடுத்தியம்பும் அறிக்கை ஒன்றை யாழ். ஆதீனம் விடுத்து நிலைமையைத் தெளிவுபடுத்தி உள்ளது.

இவ்வருட ஆரம்பத்தில் — போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த வேளையில் — யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்க மதகுருமார்கள் குழு ஒன்று, குடாநாட்டில் வைத்திய வசதிகள் கீழ் மட்டத்துக்கு வற்றி வெற்றாகியதை அவதானித்தது.

"செம்மர் ஷெவன் றான்ச் இன்ரநாஷனல்" என்ற அமைப்பைச் சேர்ந்த அந்த மதகுருமார்கள், மருத்துவ வசதிகள் இன்றி அல்லலுறும் அவதிப்படும், உயிருக்காகப் போராடும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு உதவும் மனித நேயத்துடன், நன்நோக்குடன் வைத்திய உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகளை அனுப்பி வைத்தார்கள்.

தென்னிந்திய திருச்சபையால் மானிப்பாய், இணுவில் மற்றும் பரந்தனில் நடத்தப்படும் ஆஸ்பத்திரிகளில் பயன்படுத்தவே இந்த வைத்தியப் பொருள்கள் அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்டன.

இது தான் நடந்தது. ஆனால் அரசாங்கத்தின் பிரசார இயந்திரங்களான — ஊதுகுழல்களான — இலங்கை வானொலியும், ரூபவாஹினியும் பேராயர் ஆயுதப் பொருள்களைத் தருவித்துவிட்டு, யாழ்ப்பாணத்துக்கு ஓடி வந்துவிட்டதாக விஷமப்பிரசாரம் செய்தன. தென்னிலங்கைப் பத்திரிகைகளும் அதே வழி சென்றன.

பேராயர் ஜெபநேசன் கொழும்பிலிருந்து தப்பி ஓடி வந்து நவாலி தேவாலயத்தில் மறைந்திருப்பதாகவும் பச்சைப் பொய்களைச் செய்திகளாக அவை வெளியிட்டன.

கிறிஸ்தவ அமைப்புகள் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நியாயமானதாகப் பார்க்கின்றன; போராட்டம் நடத்தப்படுவதற்கான காரணங்களை ஏற்றுக்கொள்கின்றன என்ற உட்கருத்தைவைத்துக்கொண்டு— ஆதானல் எழுந்த ஆத்திரத்தை, மனக்கொதிப்பை வெளிக்கக்கும் விதத்தில் இந்த அவதூறுப் பிரசாரம் நடத்தப்பட்டது.

இது தெற்கில் உள்ள சிங்கள கிறிஸ்தவ மக்கள், வடக்கு தமிழ் கிறிஸ்தவர்களை சந்தேகக் கண்ணோடு பார்க்கத் தூண்டுவதாகும்.

வடபகுதி மக்களுக்கு தானும் உதவாது, மற்றவர்களையும் உதவவிடாது தடுக்கும் அரசின் அநியாயத்துக்கும் இது ஓர் உதாரணம்.

உண்மையும், நீதியும் தர்மமும் ஒருபோதும் தோற்றுப் போவதில்லை. எவரது ஆதரவில்லாவிடினும் தர்மம் வென்றே ஆகும்; தலைசாயாது. இதனை சிங்கள அரசும் அதிகாரிகளும் எப்போது உணரப்போகின்றனர்?

## பெற்றோருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் செப். 9

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம் சீரணியில் இயங்குகின்றது. மாணவர் வரவு ஒழுங்கு பற்றிக் கலந்துரையாட நாளை மறுதினம் திங்கள் பாடசாலை நேரத்தில் அங்கு பெற்றோரை ஒன்று கூடுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஒ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ)

## றோற்றரக்ற் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 9

உதயன் வெளியீட்டகத்தின் ஆதரவில் யாழ். மிட் ரவுண் றோற்றரக்ற் கழகம் ஏற்பாடு செய்துள்ள கண்காட்சி நேற்று கைலாசபிள்ளையார் கோயிலடியில் உள்ள கழக மைதானத்திலும், யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திலும் ஆரம்பமாகியது.

றோற்றரக்ற்கழக மைதானத்தில் மிருகக் கண்காட்சியும், சிறுவர்களுக்கான உல்லாச விளையாட்டுக்களும் உள்ளகவிளையாட்டுகளும்—

யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கோலக் கண்காட்சி மற்றும் கேக், ஐசிங், கூந்தல் அலங்காரங்கள் கைவினைப் பொருள்கள் கண்காட்சியும் நடைபெறுகின்றன.

எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நடைபெறும் இக்கண்காட்சியை தினமும் காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை பார்வையிடலாம். (அ-எ)

## வித்துடல் விதைப்பு

யாழ்ப்பாணம், செப். 9

கடந்த புதன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் நிர்த்தனாவின் (மேரி அக்கினேஸ் கஸ்மீர் — மாதகல்) வித்துடல் இன்று பிற்பகல் 3 00 மணிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி பழைய பள்ளிவாசலடியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப்படும்.

மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக மாலை 4 மணி வரை ஐந்துசந்தி, கார்த்திகா பாலர் பாடசாலையில் வைக்கப்படும் வித்துடல், அங்கு வீரவணக்கக் கூட்டம் நிறைவுற கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித விதை குழியில் விதைக்கப்படும். [உ]

## பண்டித வகுப்புகள்

யாழ்ப்பாணம், செப். 9

ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் பிரவேச பண்டித, பாலபண்டித, பண்டித வகுப்புகள் கல்விக் கோட்டங்கள் தோறும் வழமை போல் நடைபெறுகின்றன.

இந்த வகுப்புகளில் புதிதாகச் சேர விரும்பும் மாணவர்கள் கோட்டப் பொறுப்பாசிரியர்களோடு தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. (எ)

# மருத்துவ நிலையங்களை பதிவு செய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். குடாநாட்டில் உள்ள சகல தனியார் கூட்டுறவு நிறுவன மருத்துவ நிலையங்கள் அனைத்தும் இம்மாதம் 11 ஆம் திகதிக்கும் 30 ஆம் திகதிக்கும் இடையில் தம்மை பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று தமிழீழ சுகாதார சேவைகள் பணியகம் அறிவித்துள்ளது.

ஆங்கில, சுதேச, ஹோமியோபதி, அக்குபஞ்சர் மற்றும் கிராமிய மருத்துவ ஆலோசனை நிலையங்கள் வைத்திய சாலைகள் அனைத்தும் பதிவு செய்யப்படவேண்டும் என்றும்—

தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளரிடம் இருந்து அனுமதி பெற்றுக் கொள்ளல்வேண்டும் என்றும்

இத் திகதிக்கு முன்னர் 6/2 இளங்கோ வீதி (மணிக்கூட்டுக் கோபுர வீதி) யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள தமிழீழ சுகாதார சேவைகள் பணியகத்தில் பதிவு செய்யப்படாத மேற்படி நிலையங்களில் மருத்துவ சிகிச்சை அளித்தல், ஆலோசனை வழங்கல் தடை செய்யப்படும் என்றும்— தமிழீழ சுகாதார சேவைகளின் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (இ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 9

வலி. கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் — லீக் அடிப்படையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:—

★ 3 00 மணி:— யுத்தாமல் அணி எதிர் அண்ணா ஸ்ரார்

★ 4.00 மணி :— எவரெஸ்ட் எதிர் சென். மேரிஸ்

★ 5.00 மணி:— றோயல் எதிர் அறிவொளி

★ ★ ★

தென்மராட்சி - தீவக வலய உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை சாவகச்சேரி நகரசபை பொது மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:—

★ 3.30 மணி:—சரஸ்வதி வி.க. எதிர் ரேகா வி.க.

★ 4.30 மணி:— ஒலிம்பிக் வி.க. எதிர் பிக்பூல் வி.க.

## பாடசாலை இடமாற்றம்

யாழ்ப்பாணம், செப். 9

சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலை தற்காலிகமாக சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் காலை வேளையில் இயங்கும் என்று அதிபர் அறிவித்துள்ளார். (அ)

# தொழில் வங்கி அட்டை இருந்தால் வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம், செப். 9

தமிழீழத்தினுள் கல்வி பயின்று தொழில் வாய்ப்புகள் இன்றி இருப்பவர்களைப் பதிவு செய்து, அவர்களுக்கு தமிழீழத்தில் உள்ள அரச ஸ்தாபனங்களில் ஏற்படும் வெற்றிடங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத் தரும் நடவடிக்கைகள், தமிழீழ தொழில் வங்கியால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வருங்காலத்தில் தொழில் வங்கிப் பதிவு அட்டை வைத்திருப்பவர்கள் மாத்திரமே வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தொழில் தொடர்பான நேர்முகப் பரீட்சைகளின் போதும் இனிமேல் தொழில் வங்கிப் பதிவு அட்டை விசேட கவனத்திற்குரிய தகுதியாகக் கொள்ளப்படும் இதற்கமைய, இவ் வங்கியில் தங்களைப் பதிவு செய்ய விரும்புவோர், தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பாடசாலை விடுகைப் பத்திரம், தொழில் அனுபவச்சான்றிதழ், அடையாள அட்டை, குடும்பஅட்டை போன்ற ஆவணங்களுடன் — கிழமை நாள்களில் காலை 9 மணி — நண்பகல் 12-30 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில், தமிழீழ நிர்வாக சேவையின் மானிட மூலவள அபிவிருத்திப் பிரிவில் தமது பதிவினை மேற்கொள்ளுமாறு, யாழ். மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையினர் அறிவித்துள்ளனர். [எ]

## கண்காட்சி

யாழ் மனித முன்னேற்ற நிலைய மாணவிகளின் மனைப்பொருளியல் கண்காட்சி தற்போது பிரதான வீதியில் உள்ள யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்று வருகிறது; கண்காட்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

### "த ஐலண்ட்"...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச்செய்தி தொடர்பாக கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான செய்திருந்த முறைப்பாட்டின் பேரில் — நீதிமன்ற உத்தரவுடன் — பொலீஸார் பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்ததாகக் கூறப்படுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் "லக்பிம", 'ஹிரு' பத்திரிகை நிறுவனங்களுக்குள் பொலீஸார் புகுந்து விசாரணை நடத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

### மாலுமிகளை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் தொடர்பாக தாம் தொடர்பு கொள்ளக் கூடிய வகையில் வானொலி அலைவரிசை ஒன்றை ஏற்படுத்த விடுதலைப்புலிகள் முன்வந்துள்ள போதிலும் —

நேரடிப் பேச்சுக்களை நடத்துவதற்கு தயாராக இல்லை என அரசாங்கம் அறிவித்துள்ளதாக அரசுத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

### தீர்வுத்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புக்கு அது சமர்ப்பிக்கப்படும்.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற பின்னரே அது நடைமுறைப் படுத்தப்படும். — இவ்வாறு அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

## மாணவர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், செப். 9

மாலை நேரப் பாடசாலையாக இயங்கி வந்த அருணோதயக் கல்லூரி நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் மருதனார்மடத்தில் காலை வேளை நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ)

### பொலன்னறுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமலும் அச்சத்தின் நிமித்தமும் எல்லைக் கிராமங்களில் இருந்த சிறிய சிறிய இராணுவ முகாம்கள் பலவும் மூடப்பட்டுவிட்டன.

இராணுவ முகாம்கள் மூடப்பட்டதால் தமக்கு பாதுகாப்பில்லை என்று அஞ்சி, கிராமங்களில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் தமது வீடுவாசல்களையும், விவசாயக்காணிகளையும் விட்டு விட்டு மாவட்டத்தின் உட்பகுதிகளுக்கு அகதிகளாகப் போய்ச சேர்ந்துள்ளனர்.

புலிகளின் இடைவிடாத தாக்குதல்களுக்கு அஞ்சி சூரியவேவ, கண்டகுடுவ, அசேலபுர, ரன்சரெதன, ரன்கிரித்தென, மகாவெயித்தென ஆகிய மகாவலிப் பிராந்தியம் "ப" கிராமங்களிலிருந்து நூற்றுக்கணக்கானோர் தமது விவசாயக் காணிகளையும், வீடுகளையும் விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்தப் புதிய அகதிகளைத் தவிர ஏற்கனவே பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள முகாம்களில் ஐயாயிரத்துக்கும் கூடுதலான அகதிகள் இருக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது. [அ-க]

### ஈழத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

"புலிகளின் குரல்" அறிவித்தது.

ஊர்வலத்திற்கு தலைமை தாங்கிய திராவிடர் கழகத்தின் பொதுச் செயலர் வீரமணி உட்பட 99 பேரை பொலீஸார் கைதுசெய்தனர், பொதுக் கூட்டம் நடத்தச் சென்றபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சமீபத்தில் சென்னையில் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த தொண்டர்கள் பொலீஸாரின் தடைகளையும் மீறி புதுக்கோட்டையில் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தை நோக்கி ஊர்வலமாக சென்றிருந்தனர். வழியில் இருந்த பொலிஸ் துணை ஆணையாளரின் அலுவலகத்திற்கு முன்னால் தொண்டர்கள் உட்கார்ந்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர். இதனால் போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டது.

அங்கு கூடியிருந்த தொண்டர்கள் மத்தியில் உரையாற்றிய திரு. வீரமணி—

ஸ்ரீலங்கா அரசு தமிழர்கள் மீது மேற்கொள்ளும் இன அழிப்பு நடவடிக்கையைக் கண்டித்துத் தான் நடத்தும் இந்த பொதுக் கூட்டத்தை பொலீஸார் ஏன் தடுத்து நிறுத்துகிறார்கள் என்பது தமக்கு விளங்கவில்லை எனவும்—

தமிழ் நாடு முழுவதும் ஸ்ரீலங்காவின் நடவடிக்கைக்கு எதிராக ஒரு கோடி கையெழுத்துக்கள் வாங்கி ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு அனுப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். (உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் சதாசிவக்குருக்கள்

(காரைநகர்)

பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்டவரும், காரைநகரில் வசித்தவருமான ஸ்ரீ சு. சதாசிவக்குருக்கள் நேற்றுக் (8-9-95) காலை சிவபதம் அடைந்தார்.

இவர் கனகசுந்தர அம்மாவின் அன்புக்கணவரும், திருஞானசம்பந்தக்குருக்கள் (கனடா), குமாரசாமி (கனடா), சண்முகசுந்தரம் (வலி. மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்), காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் பத்மாவதி, பரமேஸ்வரி, ஆனந்தராசா (கனடா), வேதநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலாம்பிகை (கனடா), விஜயலட்சுமி, கார்த்திகேயினி, ஸ்ரீகாந்தராசா [சிங்கர் நிறுவனம்], காலஞ்சென்ற வேதநாயகம்பிள்ளை, மற்றும் வசந்தகுமாரி (கனடா], ஸ்ரீகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று மாலை கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. சண்முகசுந்தரம்
(மகன்)

122/10 A, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
[38467]

## சின்னையா சிவப்பிரகாசம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கு, பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கனடாவில் வசித்து வந்தவரான சின்னையா சிவப்பிரகாசம் 29-08-95இல் கனடாவில் சிவபதமடைந்தார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஆனந்தசிவம், பேரின்பசிவம், திருமதி நிறைமதி-கருணாகரன், திருமதி சிவமதி-பாலகங்காதரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ம. இராசநாயகம்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
(38549)

## பொன்னையா மயில்வாகனம்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாக கொண்டவரும் மஸ்கன் (யாழ்ப்பாண கிளை) முகாமையாளரும் முன்னாள் கணக்காய்வாளர் திணைக்களத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்றவருமாகிய பொன்னையா மயில்வாகனம் காலமாகிவிட்டார்.

அன்னார் இராசதேவியின் அன்புக் கணவரும் தயாபரன் (I. T N. கொழும்பு), விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசினியின் அன்பு மாமனாரும், வேலுப்பிள்ளை, கந்தசாமி, செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

நாளை (10-09-1995) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணியளவில் அவரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள். ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

இராசதேவி
(மனைவி)

மெமோறியல் ஒழுங்கை,
மானிப்பாய்.
(38435)

## உதைபந்தாட்ட கழகக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.9

வலி. மேற்கு வலய உதைபந்தாட்டக் கழகங்களுக்கான அவசரக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு, இணுவில் மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலையில் நடைபெறும்.

## கலந்துரையாடல்

வலி. வடக்கு பிரதேச இளைஞர் வள நிலைய அங்கத்தவர்கள், பயிற்சியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9-30 மணிக்கு வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெறும். [எ]

## படை இருக்கும்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாய்வாளர்கள் பரிசோதித்ததையடுத்தே இவ்வாறான முடிவுக்கு இராணுவம்வந்துள்ளதாம்.

லொறியில் கொண்டுவரப்பட்ட உபகரணங்களில் ஜி பி. எஸ். என்ற உபகரணமும் இருந்ததாம்.

இதன் மூலம் இராணுவத்தினர் தரித்து நிற்கும் இடத்தைச் சரியாகஅறிந்துகொள்ள முடியும். மேலும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இடங்களை அவதானிக்கவும், இராணுவ முன்னேற்றத்தை கண்டறியவும், இராணுவத்தினரால் பயன்படுத்தப்படும் ஆயுதங்களை அறிந்து அதற்கு ஏற்றவாறு எதிர்த்தாக்குதலை மேற்கொள்ளவாய்ப்பும்உள்ளதாம்.

இதேபோல யுத்தத்தில் ஈடுபடும் விடுதலைப்புலிகள் இடைநடுவில் சிக்க நேரிடின் அவர்கள் இருக்கும் இடம் பற்றிய விவரத்தைப்புலிகளின் நடவடிக்கை நிலையத்தால் தெரிந்து கொள்ளமுடியுமாம். (ஓ-10)

## கண்ணீர் அஞ்சலி

### வ. வே. நவரத்தினக் குருக்கள்

ஆசிரியரும், அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை பொருளாளரும் ஆகிய அன்னாரின் மறைவு சைவ உலகத்திற்கும் எம்சபைக்கும் ஈடுசெய்ய முடியாத ஓர் இழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- அகில இலங்கை
சைவக் குருமார்,
அர்ச்சகர் சபை
உறுப்பினர்.

[83452]

# மரண அறிவித்தல்கள்

## அப்பாக்குட்டி சொக்கலிங்கம்

(முன்னாள் பிரபல வர்த்தகர், ஜமுனா ஸ்ரோஸ், பண்டாரவளை)

நாரந்தனையைச் சேர்ந்த அப்பாக்குட்டி சொக்கலிங்கம் 7-9-95 அன்று கொழும்பில் [இல. 39, பெஸ்வெல் இடம், வெள்ளவத்தை] காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி அப்பாக்குட்டி அன்னப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி நாகலிங்கம் - சின்னம்மாவின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், திருமதி பா. சாந்தாதேவி [ஆசிரியை, புளூமெண்டல் தமிழ் மகா வித்தியாலயம், கொழும்பு], சேதுராம் [ஜேர்மன்], புஸ்பராஜா [பரீஸ் ரெக்ஸ், யாழ்ப்பாணம்], திருமதி வி. ஜெயந்தா (பிரான்ஸ்), ஜீவகாந்தன் (இந்தியா], சிவபாலன் (ஜேர்மன்), தீபகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பொ. பாக்கியநாதன் [முன்னாள் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்], திருமதி சே. ஞானேஸ்வரி (ஜேர்மன்), திருமதி பு. குமாரகௌரி, க. விஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசையா, மற்றும் திருமதி சொர்ணம்மா (மலேசியா], காலஞ்சென்ற கண்ணம்மா, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (மலேசியா], மற்றும் கமலம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும், பிரேமஜா, அருண் பிரகாஷ், ஹரிப்பிரசாந்த், அஸ்வினி, சாரங்கி, சௌமிகாந்த், சாரங்கன், கௌரிசாந்த் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சொ. புஸ்பராஜா
சொ, தீபகாந்தன்
(மக்கள்)

271/3, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(38468)

## திருமதி பாலசிங்கம் புவனேஸ்வரி

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இலக்கம் 3, இராசாவின்தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி பாலசிங்கம் புவனேஸ்வரி 08-09-1995 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை தெய்வானையின் அன்பு மகளும் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வல்லிபுரம், கண்மணியின் அன்பு மருமகளும் சிவகாமி, சிவபாதம், சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பொன்னழகன் (சுவிஸ்), மெய்யழகன், அருந்ததி (சுவிஸ்], உதயசூரியன், சந்திரன் (சுவிஸ்), ஸ்ரீதரன் (சுவிஸ்], இராதாகிருஷ்ணன் (சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும் கருணாநிதி [சுவிஸ்], கதிர்காமநாதன் (சுவிஸ்], பிரியதர்ஷினி, புஸ்பலதா [சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் சுப்பிரமணியம், பொன்னம்மா, பரமேஸ்வரி, இராஜசிங்கம், திருச்செல்வம், காலஞ்சென்ற சிவராஜா ஆகியோரின் மைத்துனியும், யோகநாதன் காராளசிங்கம், ஜெயராணி ஆகியோரின் சிறிய தாயாரும் கமலதாஸன் [சுவிஸ்), சுபாஜினி, [சுவிஸ்) தர்ஷினி [சுவிஸ்], வசந்தரூபன், வசிகரன், பாஸ்கரன் [கொழும்பு), லுஜேந்தினி (சுவிஸ்), சுவிஸ்கரன், சுபாஸ்கரன், சுரேஸ்கரன், சஜபாலினி, சுஜேந்திரன், சபிதா [சுவிஸ்], சாதனா [சுவிஸ்), நிரேந்தன் (சுவிஸ்] ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [09-09 95] சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
உதய சூரியன் (சூரி)
(மகன்)

3, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
[38456]


✶ யானை முதல் பாம்பு வரை பலவகை உயிரினங்கள்,
✶ சிறுவர்கள் குதூகலித்துக் களிக்க உல்லாச விளையாட்டுக்கள்,
✶ 90 வகை வண்ணக் கோலங்கள், ✶ பலவர்ண கேக் — ஐசிங்,
✶ அழகு மிளிரும் கைவினைப் பொருள்கள்....... இன்னும் பல.

யாழ். மிட்ரவுண் றோட்டறக்ட் கண்காட்சியில்
இவற்றைப் பார்த்துப் பயன்பெறுங்கள்.

கைலாசபிள்ளையார் கோவிலடி — கழக மைதானத்திலும்,
யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்திலும்

வந்து பாருங்கள்! செப். 8 முதல் 12 வரை மு. ப. 9 மணி முதல் இரவு 10 மணி வரை
காணத் தவறாதீர்கள்! அன்பளிப்பு: ரூபா 10/- மட்டுமே


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08-09-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org